# உலகம் சிருஷ்டிக்கப்பட்டு எவ்வளவு காலம் ஆகின்றது?

**வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்**

உலகம் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டது என்பதைப்பற்றிய விஞ்ஞானக் கருத்துகள் வித்தியாச மானவைகளாகவும், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தை முரண்படுத்துகிறவைகளாகவும் இருப்பது மாத்திரமல்ல, உலகம் சிருஷ்டிக்கப்பட்டு எவ்வளவு காலம் ஆகிவிட்டது என்பதிலும் விஞ்ஞானமும் வேதாகமமும் முரண்பட்ட நிலையிலேயே உள்ளன. ஏனெனில், தற்கால விஞ்ஞானிகளின் கணிப்பீட்டின்படி உலகம் உருவாகி ஆறு முதல் இருபது அல்லது முப்பது பில்லியன் ஆண்டுகள் ஆகியுள்ளன.[1] இத்தகைய கணிப்பீடுகளின் பாதிப்புக்கும், பரிணாமக் கோட்பாட்டின் செல்வாக்கிற்கும் உட்பட்ட கிறிஸ்தவர்கள், நாம் வாழும் உலகம் 4.5 பில்லியன் ஆண்டுகள் பழைமையானது என்று கருதுகின்றனர்.[2] இதனால், பலர் ஆதியாகம சிருஷ்டிப்பின் சரிதையைச் சொல்லர்த்தமாக வியாக்கியானம் செய்யாமல், தங்கள் கற்பனையில் அர்த்தம் கற்பித்தும் வருகின்றனர். ஆனால், வேதாகம சரித்திரத்தின்படி உலகம் உருவாகி 8000 அல்லது 10000 ஆண்டுகளே ஆகியுள்ளன என்பதிற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.[3]

கி.பி.17ஆம் நூற்றாண்டில் "பிஷப் ஜேம்ஸ் அஷர்" (James Ussher) என்பவர், வேதாகமத்தில் உள்ள வம்ச வரலாற்று அட்டவணைகளை ஆதாரமாகக் கொண்டு, உலகம் கி.மு.4004ஆம் ஆண்டு உருவாகியதாகக் கணிப்பிட்டார். ஜோன் லைட்பூ.்.ட் (John Lightfoot) என்பவர் கி.மு. 4004ஆம் ஆண்டில் ஒக்கோடர் மாதம் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலான காலமே சிருஷ்டிப்பு வாரம் என்றும், 23ஆம் திகதி காலை 9.00 மணிக்கு ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டான் என்றும் போதித்தார்.[4] இதன்படி, இன்றைய காலம் வரை (அதாவது 2021 வரை) 6025 ஆண்டுகள் ஆகியுள்ளன. ஆனால், வேதாகமத்திலுள்ள வம்சவரலாற்று அட்டவணைகளில் பல தலைமுறைகள் விடப்பட்டுள்ளன.[5] ஏனெனில், பழங்கால சமுதாயங்களில் முக்கியமானதும் அவசியமானதுமாய் இருக்கின்ற தலைமுறைகள் மாத்திரமே வம்சவரலாற்று அட்டவணைகளில் குறிப்பிடப்படும்.[6] இதனால்தான், பழங்கால எகிப்திய மற்றும் மெசப்பத்தோமிய வம்சவரலாற்று அட்டவணைகளிலும் இடையில் சில தலைமுறைகள் விடப்பட்டுள்ளன.[7] மேலும், வேதாகம கால மொழிவழக்கில் தகப்பன் என்னும் சொல், தகப்பனை மாத்திரமல்ல, தாத்தாவையும், பல தலைமுறைகளுக்கு முன் உள்ளவர்களையும் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்பட்டன.[8] எனவே, பிஷப் அஷர் என்பவருடைய கணிப்பீடு முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.[9] எனினும், உலகம் உருவாகி 8000 முதல் 10000 ஆண்டுகளே ஆகியுள்ளன என்பதற்கு சில விஞ்ஞானரீதியான ஆதாரங்களும் உள்ளன.[10] இதனால், உலகம் உருவாகி பல பில்லியன் ஆண்டுகள் ஆகவில்லை.[11]

உலகம் உருவாகி 8000 முதல் 10000 ஆண்டுகளே ஆகியுள்ளன என்பதை அண்டவெளியிலிருந்து பூமியின்மீது விழும் விண்துகள்கள் (Meteoritic Dust) அறியத்தருகின்றன.

---

[1] D.R.Bates, ed., *The Earth and Its Atmosphere*, pp. 14-16; J.M.Boice, *Genesis 1-11: An Expositional Commentary*, p. 14;

[2] D.A.Young, *Christianity and the Age of the Earth*, pp. 13-67, 93-116; S.W.Bamberg, "Our Image of Warfield Must Go" In *Journal of the Evangelical Theological Society*. 34/2 June 1991), pp. 229-241; M.A.Noll, *The Princeton Theology 1812-1921*, p. 298.

[3] H.M.Morris, *The Genesis Record: A Scientific & Devotional Commentary on the Book of Beginnings*, p. 45.

[4] B.Demarest & G.Lewis, *Integrative Theology Volume 2*, p. 23.

[5] K.A.Kitchen, *On the Reliability of the Old Testament*, pp. 440-441.

[6] J.H.Walton, *Genesis: The NIV Application Commentary*, p. 45.

[7] K.A.Kitchen, *Ancient Orient and Old Testament*, p. 38.

[8] H.Wolf, *An Introduction to the Old Testament Pentateuch*, p. 96.

[9] W.H.Green, "Primeval Chronology" In *Bibliotheca Sacra*. 47 (1890), pp. 285-303; B.B.Warfield, *Biblical and Theological Studies*, pp. 235-258.

[10] A.J.M.White, *How Old is the Earth?* p. 96; H.M.Morris, *Scientific Creationism*, pp. 131-169. R.E.Kofahi & K.L.Segraves, *The Creation Explanation: A Scientific Alternative to Evolution*, pp. 181-213.

[11] D.Batten, ed., *The Creation Answers Book*, 23.

அதாவது, அண்டவெளியிலிருந்து ஆண்டொன்றுக்கு 14,300,000 தொன்கள் (டன்கள்) எடையுள்ள விண் துகள்கள் பூமியின்மீது விழுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.[12] எனவே, உலகம் உருவாகி ஐந்து பில்லியன் ஆண்டுகள் ஆகியுள்ளன என்று கூறினால் பூமியின் மேற்பரப்பில் 54 அடிகள் உயரத்திற்கு விண்துகள்கள் சேர்ந்திருக்கவேண்டும். ஆனால், பூமியின்மீது பெய்யும் மழை நீரினால் விண்துகள்கள் கரைந்து கடைசியில் கடலைச் சென்றடைந்து அங்கு "நிக்கல்" என்னும் கனிப்பொருளாக மாறுகின்றது.[13] எனினும், தற்பொழுது கடலில் இருக்கும் நிக்கலின் அளவைக் கணிப்பிட்டவர்கள், ஏறக்குறைய 8000 ஆண்டுகளாகவே விண்துகள்கள் கடலில் சேர்ந்துள்ளதாகக் கூறுகின்றனர். இதன்படி, உலகம் உருவாகி ஏறக்குறைய 8000 ஆண்டுகளே ஆகியுள்ளன.

பூமியில் விழும் விண்துகள்கள் சந்திரனிலும் விழுவதினால், முதல் தடவையாக சந்திரனுக்குச் சென்றவர்கள் உலகம் உருவாகி ஐந்து பில்லியன் ஆண்டுகள் ஆகியுள்ளன என்னும் கணிப்பீட்டின்படி அங்கு 54 அடிகள் உயரத்திற்கு விண்துகள்கள் இருக்கும் என்று எண்ணி, தரையிறங்குவதற்கு அதற்கேற்ற ஆயத்தங்களுடன் சென்றனர். ஏனெனில், சந்திரனில் மழை பெய்வதில்லை என்பதினால் அங்கு விழும் விண்துகள்கள் சந்திரனின் மேற்பரப்பிலேயே இருக்கின்றன. ஆனால், முதல் தடவையாக சந்திரனில் இறங்கியவர்களும், விஞ்ஞானிகளும் ஆச்சரியப்படும் விதத்தில் அங்கு அரை அங்குல உயரத்திற்கு மாத்திரமே விண்துகள்கள் இருந்தன. எனவே, இதன்படி ஏறக்குறைய 8000 ஆண்டுகளாகவே விண்துகள்கள் சந்திரனிலும் விழுவதினால், உலகம் உருவாகி பல மில்லியன் ஆண்டுகளாகிவிட்டன என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.[14]

பூமியிலும் சந்திரனிலும் விழும் விண்துகள்கள் மாத்திரமல்ல, அண்டவெளியில் இருக்கும் வால் நட்சத்திரங்களும், உலகம் உருவாகி 10000 ஆண்டுகளுக்கு மேல் ஆகவில்லை என்பதை அறியத்தருகின்றன. இந்த வால் நட்சத்திரங்களின் சிறப்பம்சம், அவற்றின் வால் பகுதி எப்பொழுதும் எரிந்துகொண்டிருப்பதாகும். இதனால் இவற்றின் வால்பகுதி குறைவடைந்து வருகிறது. இத்தகைய வால் நட்சத்திரங்களில் ஒன்று "ஹேலி" என்னும் பெயரைப் பெற்றுள்ளது. 76 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மானிடக் கண்களுக்குத் தென்படும் இவ்வால் நட்சத்திரம், கடைசியாக 1986ஆம் ஆண்டு தென்பட்டது. இது ஒரு வினாடிக்கு 30 தொன்கள் என்ற அளவில் எரிந்து கொண்டிருக்கின்றது. எனவே, உலகமும் ஏனைய கிரகங்களும் உருவாகி பல பில்லியன் ஆண்டுகள் ஆகிவிட்டதென்றால், இவ்வால் நட்சத்திரம் எப்பொழுதோ முழுமையாக எரிந்து இல்லாமல் போயிருக்கும். ஆனால், இவ்வால் நட்சத்திரம் இன்றும் அண்டவெளியில் இருப்பது, உலகம் உருவாகி சில ஆயிரம் வருஷங்களே ஆகின்றன என்பதை உறுதிப்படுத்துகிறது. இதைப்போலவே, பல வால் நட்சத்திரங்கள் அண்டவெளியில் உள்ளன. இவைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து இல்லாமல் போகின்ற நிலையிலேயே இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுவதோடு, இவற்றின் ஆயுட்காலம் 10000 ஆண்டுகளுக்கு உட்பட்டதாகவே இருப்பதாகவும் கண்டுபிடித்துள்ளனர். எனவே, பூமி உட்பட அண்டவெளியில் இருக்கும் கிரகங்கள் அனைத்தும் 10000 ஆண்டுகள் வரையே பழைமையானவைகளாய் உள்ளன.[15]

பூமியைப்பற்றிய சில ஆராய்ச்சிகளும், உலகம் உருவாகி சில ஆயிரம் வருஷங்களே ஆகின்றன என்பதை அறியத்தருகின்றன. இத்தகைய ஆராய்ச்சிகளில் முக்கியமானது பூமியைச் சுற்றியுள்ள காந்த மண்டலத்தைப் பற்றியதாகும். ஏனெனில், சூரியனிலிருந்து வரும் தீங்கிழைக்கும் கதிர்கள் பூமியைத் தாக்குவதைத் தடுக்கும் இக்காந்த மண்டலத்தின் சக்தி படிப்படியாகக் குறைவடைந்து

---

[12] I.Asimov, "14 Million Tons of Dust Per Year" In *Science Digest*. 45 (January 1959), p. 34; H.Peterson, "Cosmic Spherules and Meteoritic Dust" In *Scientific American*. 202 (February 1960), p. 132.
[13] F.L.Whipple, *Advances in Geophysics*, p. 131.
[14] A.J.M.White, *How Old if the Earth?* pp. 82-84; H.M.Morris, J.C.Whitcomb, *The Genesis Flood*, pp. 379-380; D.C.C.Watson, *Myths & Miracles: A New Approach to Genesis 1-11*, pp. 19,24; Abou-Rahme, *Farid, Science Confirms the Authority of the Bible*, p. 8; P.D.Ackerman, *It's A Young Earth After All*, p. 21 Baker, 1986. W.Browm, *In the Beginning: Compelling Evidence for Creation and Flood*, p. 68.
[15] A.J.M.White, *How Old if the Earth?* pp. 79-81; R.A.Littleton, *Mysteries of the Solar System*, p. 110; H.M.Morris, J.C.Whitcomb, *The Genesis Flood*, pp. 382-383; D.C.C.Watson, *Myths & Miracles: A New Approach to Genesis 1-11*, p. 23.

வருகிறது. இக்காந்த சக்தியின் அளவு 1400 ஆண்டுகளில் பாதியாகக் குறைவடைவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதோடு, கி.பி.3991இல் முழுமையாக இல்லாமற் போய்விடும் என்றும் கூறுகின்றனர். மேலும், இக்காந்த மண்டலத்தின் சக்தி குறைவடையும் அளவை அடிப்படையாக்கொண்டு, எவ்வளவு காலமாக இது நடைபெற்றுள்ளது என்பதைக் கணிப்பிட்டுப் பார்த்தபோது, பூமி உருவாகி ஒரு சில ஆயிரம் வருஷங்களே ஆகியுள்ளது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஏனெனில், பூமி உருவாகி பில்லியன் கணக்கான ஆண்டுகள் ஆகியிருந்தால், இக்காந்த மண்டலம் எப்போதோ முழுமையாக இல்லாமற் போயிருக்கும். எனவே, குறைவடைந்து செல்லும் காந்தமண்டலத்தின் சக்தியும், உலகம் உருவாகி ஒரு சில ஆயிரம் வருஷங்களே ஆகியுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றது.[16]

நாம் வாழும் பூமிக்கும் சந்திரனுக்கும் இடையில் உள்ள தூரம் அதிகரித்துச் செல்வதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஆரம்பத்தில் 11,500 மைல்கள் தொலைவில் இருந்த சந்திரன், தற்பொழுது 238,855 மைல்கள் தொலைவில் உள்ளது. இதனால், ஆண்டொன்றுக்கு 1.5 அங்குலங்கள் சந்திரன் பூமியைவிட்டு விலகிச் செல்கின்றது. எனவே, உலகம் உருவாகி பல பில்லியன் ஆண்டுகள் ஆகியிருந்தால் சந்திரன் இப்போது இருப்பதைவிட மிகவும் தொலைவில் அல்லது கண்களுக்குத் தென்படாத அளவு தூரத்திற்குச் சென்றிருக்கும். ஆனால், சந்திரன் இன்னும் நம்முடைய கண்களுக்குத் தென்படுவதினால், உலகம் உருவாகி ஒருசில ஆயிரம் வருஷங்களே ஆகியுள்ளன.[17]

தற்காலத்தில் அறியப்பட்டுள்ள மானிட சரித்திரமும் நாகரீகமும் 6000 வருஷங்கள் பழைமையா னதாகவே உள்ளது. அதாவது, உலகில் மனிதர்கள் 6000 ஆண்டுகள் வாழ்ந்துள்ளதற்கே சரித்திர மற்றும் புதைபொருள் ஆதாரங்கள் உள்ளன.[18] எனினும், விஞ்ஞானக் கோட்பாடுக ளையே உண்மை என்று எண்ணுபவர்கள் இத்தகைய ஆதாரங்களை ஏற்றுக்கொள்வதில்லை.[19] ஆனால், விஞ்ஞானிகள் எத்தகைய கோட்பாடுகளை உருவாக்கினாலும், தேவனுடைய வார்த்தை அறியத்தருகின்ற விதமாக, உலகம் உருவாகி 8000 முதல் 10000 ஆண்டுகளே ஆகியுள்ளன. ஏனெனில், காலத்திற்குக் காலம் மாற்றமடையும் விஞ்ஞானிகளின் விளக்கங்கள் அல்ல, ஒரு காலத்திலும் மாற்றமடையாமல் இருக்கும் தேவனுடைய வார்த்தை கூறுவதே உண்மையாக உள்ளது.[20] உண்மையில், “உலகம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விஞ்ஞானத்தினால் கண்டிறியலாம். ஆனால், உலகம் எப்படி உருவாகியது என்பதை விஞ்ஞானத்தினால் கண்டுபிடிக்க முடியாது.”[21]

---

16 T.G.Barnes, “Decay of the Earth’s Magnetic Moment and the Geochronological Implications” In *Creation Research Society Quarterly*. 8/1 (June 1971), pp. 24-29; A.J.M.White, *How Old if the Earth?* pp. 91-95; H.Morris, *Science, Scripture and the Young Earth*, p. 28; R.L.Wysong, *The Creation-Evolution Controversy: Implications, Methodology and Survey of Evidence*, p. 161. Midland: Inquiry Press, 1978; J.Sarfati, “The Earth’s Magnatic Field: Evidence that the Earth is Young” In *Creation*. 20/2 (1998), pp. 15-17.

17 K.Ham, ed., *The New Answers Book 2: Over 30 Questions on Creation/Evoution and the Bible*, pp. 50-51.

18 A.Farid, *Science Confirms the Authority of the Bible*, p. 65.

19 D.Wilkinson, *God, Big Bang and Stephen Hawking: An Exploration into Origins*, p. 145.

20 H.Morris and J.Morris, *Science, Scripture, and the Young Earth*, pp. 39-44; J.Morris, *Young Earth*, pp. 51-67.

21 J.Phillips, *Exploring Genesis*, p. 38.